මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMY AND POLICY DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 2484500, 011 2484600, 011 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2449823
වෙබ් අඩවිය / இணைய தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/RED/REG/02/CC/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 28.05.2020

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்

சகல மாகாண சபை பிரதான செயலாளர்களுக்கும்

திணைக்களத் தலைவர்களுக்கும்,

மாவட்ட செயலாளரக்ளுக்கும் மற்றும்

சகல உளளூராட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கும்

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் வருடாந்த கணக்குகள்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக எனது சம இலக்க மற்றும் 28.05.2020 ஆம் திகதிய கடிதம் சார்பாக,

02. அக் கடிதத்தில் 03 ஆம் பந்தி பின்வருமாறு மாற்றஞ் செய்யப்படுகிறது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். "மேற்தரப்பட்ட 02 ஆம் பந்தியில் கூறப்பட்டவாறு தங்களது நிறுவனங்களிலிருந்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறித்த செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் 2020 மார்ச் மாத நடுப்பகுதியில் ஏற்பட்ட இலங்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்திய COVID- 19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக அரச நிறுவனங்களில் வழமையான அலுவலகப் பணிகள் தடைப்பட்டமை காரணமாக தங்களால கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கைகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கை தங்களுக்குக் கிடைப்பதில் தாமதங்களோ அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் அரச நிதிச் சுற்றறிக்கை இல. 402 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாக நிதி ஆண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோகக்வதாக கணக்காய்வாளர் நாயகம் உளளிட்ட உயர் மட்ட அலுவலர்களுடன் 28.05.2020 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பிரகாரம், 2019 ஆம் வருடத்துகக் ான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 30.06.2020 வரை நீடிக்கப்படுகினற்தென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்."

ஆர். எம். பி. ரத்னாயக்க
பிரதி திறைசேரி செயலாளர்

ஒப்பம்: எஸ். ஆர். ஆட்டிகல
திறைசேரி செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவை அமைச்சர்களின் செயலாளர்
4. செயலாளர், பொதுநிர்வாக உள்நாடட்லுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம்
6. தலைவர், நிதி ஆணைக்குழு.

මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMY AND POLICY DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 2484500, 011 2484600, 011 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2449823
වෙබ් අඩවිය / இணைய தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/RED/REG/02/CC/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 28.05.2020

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்

சகல மாகாண சபை பிரதான செயலாளர்களுக்கும்

திணைக்களத் தலைவர்களுக்கும்,

மாவட்ட செயலாளர்களுக்கும் மற்றும்

சகல உள்ளூராட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கும்

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் வருடாந்த கணக்குகள்**

20.07.2018 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு II இன் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனமும் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையின் சுருக்கத்தினை ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியில் இருந்து சுமார் 05 மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16(2) இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் வருடாந்த நிதிக்கூற்றுடன் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் அவசியமாகும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16(2) இற்கிணங்க தங்களுடைய நிறுவனம் மற்றும் தங்களால் நிருவகிக்கப்படும் அனைத்து நிறுவனங்களும் 12.09.2002 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 402 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாகவும் அதேவேளையில் அரச நிதித் திணைக்களத்தினால் 30.01.2020 ஆந் திகதி வெளியிடப்பட்ட PFD/RED/COPA/2019/01 இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அட்டவணை வடிவமைப்பின் படியும் தயாரிக்கப்பட்டு 15.10.2019 ஆந் திகதிய 269/2019 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி 30.12.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த கணக்குகளுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை 28.02.2020 இல் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருக்கலாம் என நம்புகின்றேன்.

03. இருந்தபோதிலும், மேற்தரப்பட்ட 02 ஆம் பந்தியில் கூறப்பட்டவாறு தங்களது நிறுவனங்களிலிருந்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறித்த செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் 2020 மார்ச் மாத நடுப்பகுதியில் ஏற்பட்ட இலங்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்திய COVID- 19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக அரச நிறுவனங்களில் வழமையான அலுவலகப் பணிகள் தடைப்பட்டமை காரணமாக தங்களால் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கைகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தங்களுக்குக் கிடைப்பதில் தாமதங்களோ

அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் அரச நிதிச் சுற்றறிக்கை இல. 402 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாக நிதி ஆண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட உயர் மட்ட அலுவலர்களுடன் ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகத்தில் 28.05.2020 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பிரகாரம், 2019 ஆம் வருடத்துக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 30.06.2020 வரை நீடிக்கப்படுகின்றதென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஆர். எம். பி. ரத்னாயக்க
பிரதி திறைசேரி செயலாளர்

ஒப்பம்: எஸ். ஆர். ஆட்டிகல
திறைசேரி செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவை அமைச்சர்களின் செயலாளர்
4. செயலாளர், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம்
6. தலைவர், நிதி ஆணைக்குழு.